இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 13-02-2025

# டெல்லியைக் கைப்பற்றி என்ன பயன்?

அரவிந்த கெஜ்ரிவால் முதலமைச்சராக இருக்கிறார் என்பதற்காக டெல்லி மாநிலத்தின் அனைத்து அதிகாரங்களையும் பறித்து அதனை 'டம்மி' மாநிலமாக மாற்றியது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இப்போது அந்த 'டம்மி' மாநிலத்தைக் கைப்பற்றிவிட்டதாக மகிழ்ச்சி அடைகிறது. 'டம்மி' மாநிலத்தில் ஆட்சியை அமைப்பதால் என்ன பயன்?

11 ஆண்டுகளுக்குப் பிறகு ஆம் ஆத்மி கட்சியின் ஆட்சியை அகற்றி இருக்கிறது பா.ஜ.க. டெல்லி தேர்தலில் கடைசியாக 1993 ஆம் ஆண்டு வெற்றி பெற்றது பா.ஜ.க. 27 ஆண்டுகளுக்குப் பிறகு பா.ஜ.க. வெற்றியைப் பெற்றுள்ளது. 'டெல்லியை பேரழிவில் இருந்து விடுவித்து விட்டதாக' பிரதமர் மோடி அறிக்கை கொடுத்துள்ளார். டெல்லி என்ற மாநிலத்தின் அதிகாரத்தை அழித்ததே பா.ஜ.க. அரசுதானே?

டெல்லி மாநிலத்தின் அதிகாரத்தையே பறிக்கும் சட்டத்தை 2023 மே மாதம் 19 ஆம் தேதி அன்று நிறைவேற்றியது ஒன்றிய பா.ஜ.க. அரசு. தேசிய தலைநகர் டெல்லி அரசின் சட்டத்தை (1991) திருத்தும் வகையில் இதனைக் கொண்டு வந்தார்கள். ' குடிமைப் பணி அதிகாரிகளை கட்டுப்படுத்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட டெல்லி அரசுக்கு அதிகாரம் உண்டு' என்று உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை நிராகரிக்கும் வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

உச்சநீதிமன்றத்தின் மேற்கண்ட தீர்ப்புக்கு சவால்விடும் விதமாக, டெல்லி யூனியன் பிரதேச அரசின் நிர்வாக அதிகாரத்தை பறிக்கும் வகையில், **தேசிய தலைநகர் பிரதேச டெல்லி அரசு சட்டத்தைத் (The Government of National Capital Territory of Delhi Act - 1991) திருத்தி, தேசிய தலைநகர் குடிமைப் பணி ஆணையத்தை (National Capital Civil Service Authority) உருவாக்குவதற்கான அவசரச் சட்டத்தை பிறப்பித்தார்கள்.**

❖ **இதன் மூலம் அதிகாரிகள் நியமனம், பணியிட மாற்றம் ஆகியவற்றை அந்த மாநில அரசு செய்ய முடியாது. 'தேசிய சிவில் சேவை ஆணையம்' என்ற அமைப்புதான் செய்ய முடியும்.இந்தக் குழுவில் மாநில அரசுடன் இணைந்து ஒன்றிய அரசு அதிகாரிகளும் இருப்பார்கள். இவர்கள் முடிவெடுத்து துணை நிலை ஆளுநருக்கு அனுப்ப வேண்டும். இதனை ஏற்பதும் மறுப்பதும் ஆளுநரின் விருப்பம் ஆகும்.**

❖ **தனது சொந்த விருப்பத்தின் பேரில் டெல்லி சட்டசபையை ஆளுநர் கூட்டலாம். பேரவை நடக்கும் நாட்களை அதிகரிக்கலாம். குறைக்கலாம்.**

❖ **அரசின் நிர்வாகத்தில் குறைபாடு இருந்தால் அதனை அமைச்சருக்குச் சொல்லாமல், நேரடியாக ஆளுநருக்கு அதிகாரிகள் கொண்டு போகலாம்.**

❖ **அதிகாரிகள், வாரியங்கள், ஆணையங்கள், சட்டபூர்வ அமைப்புகள் அமைக்கும் அனைத்து அதிகாரமும் ஆளுநருக்கே உண்டு.**

இதுதான் அந்தச் சட்டம். மொத்தமாகச் சொன்னால், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முதலமைச்சருக்கோ, அமைச்சர்களுக்கோ, அமைச்சரவைக்கோ எந்த அதிகாரமும் இல்லை. டம்மியாக உட்கார்ந்து இருப்பார்கள். அப்படித்தான் உட்கார வைக்கப்பட்டார் அரவிந்த் கெஜ்ரிவால். புதிதாக வரப்போகும் பா.ஜ.க. முதலமைச்சரும் அப்படிதான் டம்மியாக உட்கார வைக்கப்படுவார்.

ஆம் ஆத்மி ஆட்சியில் இருக்கிறது, அரவிந்த் கெஜ்ரிவால் அசைக்க முடியாதவராக இருக்கிறார், 'இந்தியா' கூட்டணியில் அங்கம் வகித்து அந்தக் கூட்டணியை பலப்படுத்தி வருகிறார் என்பதற்காகவே டெல்லி மாநில அரசை டம்மி ஆக்க இத்தகைய சட்டத்தைக் கொண்டு வந்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

டெல்லி சட்டமன்றத்தின் ஜனநாயக நடைமுறையில் துணைநிலை ஆளுநர் தொடர்ச்சியாகத் தலையிடுவது, டெல்லி வரவு செலவுத் திட்ட அறிக்கையைத் தாக்கல் செய்வதைத் தடுப்பது, அன்றாட நிருவாகச் செயல்பாட்டை முடக்குவது ஆகிய செயல்களை அம்மாநில துணை நிலை ஆளுநர் தொடர்ந்து செய்து வந்தார்.

அதற்கு முன்னதாக அரவிந்த் கெஜ்ரிவாலை முடிந்தவரை மிரட்டினார்கள். அவரைச் சுற்றி இருப்பவர்களுக்கு பேரம் பேசினார்கள். இதனை அரவிந்த் கெஜ்ரிவாலே வெளிப்படையாக பேட்டி கொடுத்தார். 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பேட்டி அளித்த அரவிந்த் கெஜ்ரிவால், " **ஆம் ஆத்மி கட்சியில் இருந்து விலகினால் டெல்லி முதலமைச்சர் ஆக்குவதாக மணிஷ் சிசோடியாவிடம் பா.ஜ.க. பேரம் பேசியது. அவர் மறுத்துவிட்டார். அந்தக் கட்சியினர் இப்போது என்னை நாடினார்கள். குஜராத் சட்டசபைத் தேர்தலில் எங்கள் கட்சி போட்டியிடாமல் விலகிக் கொண்டால் நாங்கள் சத்யேந்தர் ஜெயின், மணிஷ் சிசோடியா ஆகிய இருவரையும் விட்டு விடுகிறோம். அவர்கள் மீதான எல்லா வழக்குகளையும் கைவிட்டு விடுகிறோம் என்று பேரம் பேசினார்கள்.** என் நண்பர் வழியாக வந்து இந்தப் பேரத்தை நடத்தினார்கள்" என்று சொன்னார்.

அதாவது ஒரே நேரத்தில் அரவிந்த் கெஜ்ரிவாலிடமும் பேரம் பேசுவது, அவருக்கு எதிராக அவர் அருகில் இருப்பவரிடமும் பேரம் பேசுவது. இரண்டிலும் தோல்வி அடைந்த நிலையில் டெல்லி மாநிலத்தின் அதிகாரத்தையே சீர்குலைத்தார்கள். 'முதலமைச்சராக இருந்து கொள், ஆனால் அது வெறும் டம்மி பதவி ' என்று ஆக்கினார்கள்.

**"அனைத்து விவகாரங்களிலும் ஒன்றிய அரசு தலையிட்டால் டெல்லியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு எதற்கு?" என்று கேட்டது உச்சநீதிமன்றம். ( 2023 ஜனவரி 13) இப்போது நாம் பா.ஜ.க.விடம் கேட்பதும் இதுதான்.... "எந்த அதிகாரமும் இல்லாத டெல்லி மாநில ஆட்சியைக் கைப்பற்றி என்ன செய்யப் போகிறீர்கள்?"**

●●

## இந்தியத் திரையுலகின் ஆற்றல்மிகு அடையாளம்!

# 'பாடும் நிலா' எஸ்.பி.பாலசுப்ரமணியம் திருவுருவப்படத்திற்கு துணை முதல்வர் மரியாதை - குடும்பத்தாருக்கு நினைவுப் பரிசு!

### நுங்கம்பாக்கம் - காம்தார் நகரில் - சாலையின் பெயரைத் திறந்து வைத்து இல்லம் சென்றார்!





**சென்னை, பிப். 13-**

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் மாலை, பெருநகர சென்னை மாநகராட்சி - நுங்கம்பாக்கம் - காம்தார் நகர் முதன்மைச் சாலைக்கு புதிதாகப் பெயர் சூட்டப்பட்ட 'எஸ்.பி.பாலசுப்ரமணியம் சாலை' மின் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்து, எஸ்.பி.பி. அவர்களைப் பெருமைப்படுத்தினார்.**

*இந்நிகழ்வைத் தொடர்ந்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட வலைதளப் பதிவு வருமாறு:-*

**இந்திய திரையுலகின் ஆற்றல்மிகு அடையாளம். 40 ஆயிரத்துக்கும் அதிகமான பாடல்களைப் பாடிய 'பாடும் நிலா'. மறைந்த பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம் சாரின் பெயரை, அவர் வாழ்ந்த நுங்கம்பாக்கம் பகுதியில் உள்ள காம்தார் நகர் முதன்மைச் சாலைக்குச் சூட்ட வேண்டும் என்று அவருடைய குடும்பத்தார் – ரசிகர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.**

**அதனை நிறைவேற்றும் வகையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், காம்தார் நகர் முதன்மை சாலைக்கு 'எஸ்.பி.பாலசுப்ரமணியம் சாலை' என்று பெயர் சூட்ட உத்தரவிட்டார்கள்.**

**அதற்கான அரசாணை சமீபத்தில் வெளியிடப்பட்ட நிலையில், 'எஸ்.பி. பாலசுப்ரமணியம் சாலை'க்கான வழி காட்டிப் பலகையை நுங்கம்பாக்கத்தில் இன்று திறந்து வைத்தோம்.**

**எஸ்.பி.பி.சாரின் திருவுருவப் படத்துக்கு மரியாதை செய்து, அவரின் குடும்பத்தாருக்கு நினைவுப் பரிசினை வழங்கினோம். காற்றில் கானமாக வாழ்ந்து கொண்டிருக்கும் எஸ்.பி.பி. சாரின் புகழ் ஓங்கட்டும்!**

இவ்வாறு துணை முதல்வர் அவர்கள் வலைதளப்பதிவில் பதிவிட்டிருந்தார்.

## திருவேற்காடு கூவம் ஆற்றின் குறுக்கே

# புதிதாக உயர்மட்டப் பாலம்! அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார்!

## அமைச்சர் சா.மு.நாசர் முன்னிலையில்

*சென்னை, பிப். 13-*

*திருவள்ளூர் மாவட்டம், பருத்திப்பட்டு, திருவேற்காடு, கூவம் ஆற்றின் குறுக்கே புதியதாக கட்டப்பட்டுள்ள உயர்மட்டப்பாலத்தை, 10.02.2025 அன்று பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார். இதில் அமைச்சர் சா.மு.நாசர் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.*

*திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலுக்கா, திருவேற்காடு பகுதி மக்கள், பூந்தமல்லி, ஆவடி மற்றும் சென்னைப் பகுதிகளுக்குச் செல்ல கூவம் ஆற்றின் குறுக்கே இருந்த தரைப்பாலத்தைப் பயன்படுத்தி வந்தனர். பருவமழை காலத்தில் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதால் தரைப்பாலம் மூழ்கி, மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். ஆகையால் இப்பகுதி மக்கள் கூவம் ஆற்றினைக் கடக்க வெகு தூரம் செல்ல நேரிட்டது.*

*இதனை கருத்தில் கொண்டு, தரைப்பாலத்திற்குப் பதிலாக, புதிய உயர்மட்ட பாலம் ரூ.18.40 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்து, 94 மீட்டர் நீளமும், 17 மீட்டர் அகலத்தில், இருவழி பாதையுடன், இருபக்கமும் மிதிவண்டி பாதை (Cycle track) 2.00 மீட்டர் மற்றும் பாதசாரிகள் நடைபாதையுடன் (Footpath with Hand rails) 1.50 மீட்டர் என்று இப்பாலம் புதிய வகையில் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளது.*

*புதியதாக கட்டப்பட்ட இப்பாலத்தினால், பருத்திப்பட்டு, திருவேற்காடு, வீரராகவபுரம், ஆவடி, பூந்தமல்லி, காடுவெட்டி, கோவர்தனகிரி, சென்னீர்குப்பம் பகுதிகளில் வசிக்கும் மக்கள் எளிதாக கூவம் ஆற்றைக் கடக்க பெரிதும் பயன்படும் வகையில் அமைந்துள்ளது.*

*இப்பாலத்தினை 10.2.2025 அன்று சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலன் நலத்துறை அமைச்சர் திரு.ஆவடி சா.மு.நாசர் முன்னிலையில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்கள்.*

*இத்திறப்பு விழாவிற்கு திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் ச.சசிகாந்த் செந்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, அரசு செயலாளர், டாக்டர்.ஆர்.செல்வராஜ், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், நெடுஞ்சாலைத்துறை பெருநகர அலகின் தலைமைப் பொறியாளர் எஸ். ஜவஹர் முத்துராஜ் மற்றும், பெருநகர அலகின் கண்காணிப்புப் பொறியாளர், கோட்டப் பொறியாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள்.*

## பிப்.10 அன்று ஒரே நாளில்

# 237.98 கோடி ரூபாய் வருவாயை பதிவுத்துறை ஈட்டியது!

## அமைச்சர் பி.மூர்த்தி தகவல்!

*சென்னை, பிப். 13-*

*10.2.2025 திங்கள் கிழமை அன்று அதிகளவில் பத்திரப்பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டன.*

*பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று 10.2.2025 அன்று ஒரு சார் பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100-க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200-க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப்பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100-க்குபதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுடன் கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டது.*

*2024-25ம் நிதியாண்டில் கடந்த 05.12.2024 அன்று ஒரே நாளில் இதுவரையில் இல்லாத அளவில் அரசுக்கு ரூ.238.15 கோடி வருவாய் ஈட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து, உயர்த்தப்பட்ட முன்பதிவு வில்லைகளை பொதுமக்கள் பயன்படுத்தியதன் மூலம் 10.2.2025 அன்று 23,421 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு இதே நிதியாண்டில் இண்டாவது முறையாக அரசுக்கு ரூ.237.98 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒரு நாள் வருவாய் வசூலில் இண்டாவது முறையாக இதே நிதியாண்டில் அதிக வசூல் செய்து புதிய மைல்கல்லை பதிவுத்துறை எட்டியுள்ளது என வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்கள்.*



திருவள்ளூர் மாவட்டம்,பருத்திப்பட்டு திருவேற்காடு கூவம் ஆற்றின் குறுக்கே 18 .40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலத்தை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் திறந்து வைத்து புதிய பாலத்தை பார்வையிட்டார்கள் உடன் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் டாக்டர் ஆர். செல்வராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், நெடுஞ்சாலைத்துறை பெருநகர அலகின் தலைமை பொறியாளர் எஸ்.ஜவஹர் முத்துராஜ். பெருநகர அலகின் கண்காணிப்பு பொறியாளர் பாஸ்கர், திருவேற்காடு நகர்மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, கோட்டப் பொறியாளர் ரவிச்சந்திரன், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் கற்பகம், பூவிருந்தவல்லி வட்டாட்சியர். கோவிந்தராஜ் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், சன்.பிரகாஷ், ப.ச.கமலேஷ், ஏ.ஜெ.பவுல், பி.வி.கே.கண்ணன், காஞ்சனா இளையராஜா, பெஞ்சமின், ஜெ.சரவணன், நடராஜன், செல்லதுரை, நிர்வாகிகள் பு.பரிசமுத்து, எம்.காந்தி, பி.உமாபதி, பிரதானம், மனோகரன், விநாயகம், கே.பி.எஸ். சுதாகர், இளங்கோ, கெஜா, பன்னீர்செல்வம், ஜெகன், இயேசு, சாந்தி ராஜா, பி.ஜி.எம்.விநாயகம், செந்தில், நூம்பல் ஆசைதம்பி, என்.ராஜ், மா.அப்பு (எ) ஜெபராஜன், ஆ.நாராயணன், தா.குடியரசன், நரேஷ், பேபிஸ்ரீ, அமலேஷ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.